**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.34/2025**

**நாள் : 24.03.2026**

**ம.சா. 1 திரு.உதயகுமார்**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் விபத்து தேதியில் பயணித்த வாகனம் பழைய காலத்து சி.டி 100 வாகனம் ஆகும். அதன் பதிவுஎண் ஞாபகமில்லை. விபத்து எப்படி நடந்தது என்றால் நான் கொரியர் ஆபிசுக்கு போகவேண்டி துறையூரில் இருந்து நியூ டவுன் வாணியம்பாடி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது எனக்கு முன்னால் சென்ற ஆட்டோவானது இரும்பு ஷீட்டுகளை ஏற்றிக்கொண்டு சென்றது. அந்த இரும்பு ஷீட்டுகள் ஆட்டோவின் அகலத்தைகாட்டிலும் வெளியே தெரிநத்து. அந்த ஆட்டோ திடீரென பிரேக் போட்டதால் என்னால் வாகனத்தை கன்ட்ரோல் பண்ண இயலாத நிலையில் ஆட்டோவில் இருந்த தகடுகள் என்மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி ஆட்டோ பயணிகள் ஆட்டோவா அல்லது லோடு ஏற்றிச் செல்லும் ஆட்டோவா என்றால் அது லோடு ஏற்றிச் செல்லும் ஆட்டோ. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதேபோல் ஆட்டோ ஓட்டுநருக்கும் ஓட்டுநர் உரிமம் உள்ளது. 1996 வருடத்திய பழைய வாகனமாக இருந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த முடியாமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7ல் தவறுதலாக 15,000/-த்திற்கான பில்கள் இரண்டுமுறை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆட்டோவில் அதன் கொள்ளளவுக்கும் அதிகமாக தகடுகளை ஏற்றிச் சென்று விபத்தை ஏற்படுத்தியதால் அதன் உரிமையாளரான 1ஆம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.